# விளையாட்டை ஊக்குவிப்பதில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு!

**முதல்வர் உரை...**

முதல் பக்கத் தொடர்ச்சி

நம்முடைய விளையாட்டுத் துறை, எத்தனையோ மகத்தான சாதனைகளை செய்து வருகிறது. விளையாட்டு வீரர்களின் சாதனைகளை அங்கீகரிக்க, 'இந்து ஸ்போர்ட்ஸ்டார் ஏசஸ் விருது' வழங்கும் நிகழ்ச்சியில், 2023-க்கான "விளையாட்டை ஊக்குவிப்பதில் சிறந்த மாநிலம்" என்று தமிழ்நாட்டிற்கு பாராட்டு கிடைத்தது. விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்த நம்முடைய அரசு சார்பில் ஏராளமான உதவிகளை வழங்கிக்கொண்டு வருகிறோம். விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 25 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையை, 30 இலட்சமாக உயர்த்தியதுடன், இந்தத் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் பதக்கங்கள் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு, அவர்களின் பண உதவி, 10 இலட்சம் ரூபாயில் இருந்து 12 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. தேசிய அளவிலான போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற 20 வயதுக்குட்பட்ட வீரர் வீராங்கனைகளுக்கு ஒரு ஆண்டுக்கு வழங்கப்பட்டு வந்த 2 இலட்சம் ரூபாய் நிதி உதவி, இப்போது 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. விளையாட்டு வீரர்களுக்கு தேவையின் அடிப்படையில், விளையாட்டு சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்பதற்காக வெளிநாடுகளில் பயிற்சி மேற்கொள்வதற்கும் நிதி உதவி வழங்கப்படுகிறது. மாநில அரசால் 76 புதிய பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த முயற்சியின் வழிவகையில், வெளிநாட்டிலிருந்து 4 உயர் செயல்திறன் பயிற்றுநர்கள், 5 நிபுணத்துவம் வாய்ந்த பயிற்றுநர்கள் மற்றும் 2 பாரா விளையாட்டு பயிற்றுநர்கள் சர்வதேச அளவிலான பயிற்சி அளிப்பதற்காக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மதுரை, எம்.ஜி.ஆர். மாவட்ட விளையாட்டு வளாக செயற்கை இழை ஓடுதளப்பாதை மறுசீரமைப்புக்கான நிதிஒதுக்கீடு - 10 இடங்களில் சிறு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான நிருவாக அனுமதி, அதற்குரிய நிதி ஒதுக்கீடு - தென்காசியில், மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க நிதி ஒதுக்கீடு - தூத்துக்குடி மாவட்டத்தில் ஹாக்கி விளையாட்டு வீரர்களுக்காக முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைக்க நிதி ஒதுக்கீடு - செங்கல்பட்டு மாவட்டத்தில், மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க நிதி ஒதுக்கீடு - சேலம் மாவட்டத்தில், 'பல்நோக்கு விளையாட்டு வளாகம்' அமைக்க நிதி ஒதுக்கீடு என்று ஏராளமான திட்டங்களை விளையாட்டுத் துறை செய்துவருகிறது! இது மூலமாக இந்தியாவை மட்டுமல்ல. உலகத்தையே ஈர்க்கும் மாநிலமாக, விளையாட்டுத் துறையில் புகழ் பெற்றுள்ளது தமிழ்நாடு!

### விளையாட்டுத் துறையில் உதயநிதியின் சிறப்பான பணி!

விளையாட்டை மேம்படுத்த வேண்டும் என்றால், அதற்கான திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும்! அதைத்தான் தம்பி உதயநிதி இன்றைக்கு செய்துக்கொண்டிருக்கிறார். அதற்கான அடித்தளங்களில் மிகமிக முக்கியமானது, இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்! வீரர்கள், தங்களின் திறமைகளை வளர்க்க, ஒற்றுமையை ஊக்குவிக்க, ஆற்றல்களை வெளிக்கொணர, புதிய சாதனைகளைப் படைக்க, வாய்ப்புகளை பெற, இந்தபோட்டி வழிவகுக்கிறது! இன்றைய இறுதி நாள் நிகழ்வில் பங்கேற்று சிறப்பிக்கப்பட்ட எல்லா வீரர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்கள் இந்த வெற்றிகளுக்காக எடுத்த முயற்சி, உழைப்பு, தன்னம்பிக்கை ஆகியவற்றைப் பாராட்டுகிறேன். உங்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான எல்லா ஆதரவையும் தமிழ்நாடு அரசு வழங்கும் என்ற உறுதியை இந்த மேடையில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப்போட்டிகளில் பங்கேற்கும் இளம் திறனாளர்களை கண்டறிந்து, அவர்களை முறையாக டிரெயின் (Train) செய்வதுதான் இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் முக்கிய நோக்கம்!

மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகளில் சுமார் 11 இலட்சம் வீரர்கள், வீராங்கனைகள் 36 வகையான தனிப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுள்ளனர். 15 நாட்கள் நடத்தப்பட்ட மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகளில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட போட்டி நடுவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் இதர ஊழியர்கள் பணியாற்றி இருக்கிறார்கள். தமிழ்நாட்டு இளைஞர்களிடையே, விளையாட்டுகளில் பங்கேற்கும் ஆர்வம் அதிகரித்திருக்கிறது என்பதன் அடையாளம்தான் இது!

> **இந்த முதலமைச்சர் கோப்பை போட்டியில் எவ்வளவு பேர் பரிசு பெற்று இருக்கிறார்கள் என்பதை விட, எத்தனை இலட்சம் பேர் ஆர்வத்துடன் பங்கேற்றார்கள் என்பதுதான் முக்கியம்! வெற்றியை விட போட்டியிடுவதற்கான துணிவுதான் முக்கியம்! அதனால், வரும் ஆண்டுகளில் இன்னும் நிறைய திறமையாளர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்!**

வெற்றியை எட்டிப்பிடிப்பதற்கு, திட்டமிட்ட முயற்சியும், கட்டுப்பாடும் அவசியம்! உங்களின் வெற்றிக்கான காரணம் என்ன தெரியுமா? திறமை! தன்னம்பிக்கை! உழைப்பு! கட்டுப்பாடு! அதனால்தான் நம்முடைய திராவிட மாடல் அரசு, உங்களை போன்ற திறமை மிக்க வீரர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குகிறது!

### தேசிய அளவில் உலக அளவில் சாதிக்க வேண்டும்!

தமிழ்நாட்டின் சிறந்த வீரர்களாக விளங்கிக்கொண்டிருக்கும் நீங்கள், தேசிய மற்றும் உலக அளவிலும் சாதிக்க வேண்டும்! தொடர்ந்து வெற்றி பெற வேண்டும்! இந்த போட்டிகள் உங்களின் திறமைகளை மட்டும் வெளிக்காட்டவில்லை; நம்முடைய விளையாட்டு துறையில் பணியாற்றும் 'கோச்'-களின் திறன்களையும் வெளிப்படுத்தி இருக்கிறது! இந்த திறமைகளால்தான் விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு தனியாக மின்னுகிறது!

தம்பி மாரியப்பன் தங்கவேலு அவர்களும் துளசிமதி முருகேசன் - நித்யஸ்ரீ சிவன் - மணிஷா ராமதாஸ் ஆகியோரும் இந்த ஆண்டு பாராலிம்பிக்ஸ்-ல் பதக்கம் வென்று நம்முடைய தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்! இதில் துளசிமதியின் தந்தை முருகேசன் அவர்கள் அப்போது அளித்த பேட்டியை நான் பார்த்தேன். அந்தப் பேட்டியில் சொல்கிறார், "கால்நடை மருத்துவப்படிப்பு படிக்கும் என்னுடைய மகள், இடையிடையே பயிற்சி செய்து, பாராலிம்பிக்ஸ் வரை சென்று, பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்று இருப்பது, தமிழ்நாடு அரசின் மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் துறை அமைச்சரின் முழு முயற்சி"- என்று சொல்லியிருக்கிறார்.

விளையாட்டுத்துறையில் இளைஞர்கள் பங்கேற்பதை ஊக்குவிக்க, எத்தனையோ திட்டங்களை நாங்கள் செயல்படுத்துகிறோம்! கல்வி மற்றும் விளையாட்டு இரண்டிற்கும் நம்முடைய திராவிட மாடல் அரசு சரிசமமான முக்கியத்துவத்தை கொடுக்கிறது! நம்முடைய திட்டங்களையும், உருவாக்கித்தர வாய்ப்புகளையும் பயன்படுத்தி, நீங்கள் உலகளவில் பெருமை பெற வேண்டும்! இதற்கான எல்லா ஆதரவையும் வழங்குவதற்கு தயாராக இருக்கிறோம்!

இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டு இருக்கும் பெற்றோர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, விளையாட்டு என்பது, வெறும் போட்டி இல்லை; அது உடல் வலிமையையும், மன வலிமையையும் தரக்கூடியது! உங்கள் பிள்ளைகளுக்கு விளையாட்டில் ஆர்வம் இருந்தால் அதை ஊக்கப்படுத்துங்கள்! நம்முடைய ஆதரவு கிடைத்தால்போதும், அதுவே நம்முடைய பிள்ளைகளுக்கு பாதி வெற்றியைக் கொடுத்துவிடும்! நம்முடைய ஆதரவுடன், இன்னும் எத்தனை குற்றாலீஸ்வரன்களும், இளவழகிகளும் - சரத் கமல்களும் - மாரியப்பன்களும் - பிரக்ஞானந்தா - குகேஷ் போன்றவர்களும் சாதாரண வீடுகளிலிருந்து வந்து, உலக அரங்கில் பதக்கங்களையும், பாராட்டுகளையும் குவிக்கப்போகிறார்கள் என்று பாருங்கள். இதை தமிழ்நாட்டு இளைஞர்களான உங்கள் திறமைமேல் நம்பிக்கை வைத்து சொல்கிறேன்.

### வெற்றியைவிட போட்டிக்கான துணிவுதான் முக்கியம்!

இந்த முதலமைச்சர் கோப்பை போட்டியில் எவ்வளவு பேர் பரிசு பெற்று இருக்கிறார்கள் என்பதை விட, எத்தனை இலட்சம் பேர் ஆர்வத்துடன் பங்கேற்றார்கள் என்பதுதான் முக்கியம்! வெற்றியை விட போட்டியிடுவதற்கான துணிவுதான் முக்கியம்! அதனால், வரும் ஆண்டுகளில் இன்னும் நிறைய திறமையாளர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்!

அதேசமயம், உங்கள் எல்லோருக்கும் 'ஸ்போர்ட்ஸ்மேன்ஷிப்' (Sportsmanship) மிகவும் அவசியம்! போட்டிகளில் வெற்றி பெறுவதற்காக மட்டுமே விளையாடக் கூடாது! ஏன் என்றால், வெற்றி என்பது டார்கெட் (Target)! விளையாட்டு என்பது உங்களின் பேஷன் (Passion)!

"Chase Your Passion, Success will follow you" உங்கள் வெற்றியை கொண்டாட தமிழ் நாடே காத்திருக்கிறது!

எனவே நான் மீண்டும், மீண்டும் அனைவரையும் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். அதுமட்டுமல்ல. இங்கு நமக்கு முன்பு நடத்திய கலைநிகழ்ச்சிகள், ஆடல் பாடலோடு நடைபெற்ற கலைநிகழ்ச்சிகள். இன்றைக்கு திராவிட மாடல் அரசு செய்துகொண்டிருக்கும் சாதனைகளையும், திட்டங்களையெல்லாம் அந்த ஆடல்கள் மூலமாகவும், பாடல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்களே..... அவர்கள் சிறப்பாக அந்தப் பணியை செய்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

**பெங்களூரு கட்டட விபத்தில் உயிரிழந்த**

# தமிழ்நாட்டைச் சேர்ந்த 2 பேருக்கு தலா ரூ.2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.26 -**

**கர்நாடக மாநிலம், பெங்களூரு, ஹென்னூரில் பெய்த கனமழையின் காரணமாக கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்த தமிழர்கள் இருவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கர்நாடக மாநிலம், பெங்களூரு, ஹென்னூரில் கடந்த 22.10.2024 அன்று பிற்பகலில் பெய்த கனமழையின் காரணமாக கட்டுமானப்பணி நடந்துகொண்டிருந்த கட்டடம் எதிர்பாராத விதமாக இடிந்து விழுந்த விபத்தில் 8 நபர்கள் உயிரிழந்தனர்.

மேலும், இவ்விபத்தில் தமிழ்நாட்டிலிருந்து கட்டுமானப் பணிக்காக சென்றிருந்த கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மணி கண்டன் மற்றும் சத்தியராஜ் ஆகிய இருவரும் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், மனவேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த மணிகண்டன் மற்றும் சத்தியராஜ் ஆகியோரின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

# தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. சிறப்புரை!

தஞ்சாவூர், அக். 26 -

தஞ்சாவூர் தெற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம், பட்டுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர் சு.ப.சேகர் தலைமை வகித்தார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் நா. அசோக்குமார் எம்.எல்.ஏ, மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆர்.பி.ரமேஷ், பொன். சத்தியமூர்த்தி, ஞா.மைக்கேலம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக உயர்நிலைசெயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு கருத்துரை வழங்கினார்.

அதனை தொடர்ந்து மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கியும், தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள பட்டுக்கோட்டை, பேராவூரணி தொகுதி பார்வையாளர்களை அறிமுகம் செய்து சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் பட்டுக்கோட்டை தொகுதி தேர்தல் பார்வையாளர் செ. குறிஞ்சிவாணன், பேராவூரணி தொகுதி மேற்பார்வையாளர் சுப.சரவணன், மாநில நிர்வாகிகள் ஏனாதி பா.பாலசுப்ரமணியன், பழஞ்சூர் கே.செல்வம், வீ.ஜெயபிர காஷ், கார்த்திகேயன் வேலுசாமி, பொதுக்குழு உறுப்பினர் அ.மு.ரூசுவெல்ட், நகரக் கழகச் செயலாளர்கள் எஸ்.ஆர்.என்.செந்தில்குமார், எஸ்.எச்.அஸ்லாம், இராம. குணசேகரன், ஒன்றியச் செயலாளர்கள் மு.கி.முத்து மாணிக்கம், வை.ரவி சந்திரன், க.அன்பழகன், கோ. இளங் கோவன், வீ.கோவிந்தராசு, ஆர்.இளங்கோவன், என்.பி.பார்த்திபன், பா. இராமநாதன், ப.முருகானந்தம், சோம.கண்ணப்பன் உள்ளிட்ட பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

திராவிட இயக்கத்தின் 5ஆம் தலைமுறை தலைவராக விளங்கக் கூடிய இளம் தலைவர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதல்வராக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியமனம் செய்ததை தஞ்சை தெற்கு மாவட்ட கழகம் வரவேற்று வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது,

தலைமை கழகத்தால் தொகுதியின் பார்வையாளராக நியமிக்கப்பட்ட பட்டுக்கோட்டை தொகுதி பார்வையாளர் குறிஞ்சிவாணன், பேராவூரணி தொகுதி பார்வையாளர் சுப.சரவணன் அவர்களையும் மாவட்ட கழகத்தின் சார்பில் வரவேற்பதோடு தலைமை கழகம் எதிர்பார்த்திடும் முழுமையான ஒத்துழைப்பை அவர்களுக்கு வழங்குவோம் என்பதை இக்கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது.

வாக்காளர் சேர்க்கைக்கான சிறப்பு முகாம்கள் நவம்பர் 9,10 மற்றும் 23,24 ஆகிய தேதிகளின் நடைமுறையில் இருக்கிறது. எனவே, அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் தலைமை கழகத்தில் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் மாவட்ட கழகத்தால் நியமிக்கப்படும் பார்வையாளர்கள் இணைந்து மேற்கண்ட முகாம் நடைபெறும் தேதிகளில் இரண்டு தொகுதிகளிலும் ஆய்வு மேற்கொள்வது எனவும், முடிவெ டுக்கப்படுகிறது, தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 200 இடங்களில் வெற்றி எனும் இலக்கை பெறுவதற்காக கடுமையாக உழைப்பதென தீர்மானிக்கப்படுகிறது.

தலைமை கழக அறிவுறுத்தலின்படி கழக வளர்ச்சிக்காக தலைமை கழகத்தால் வழங்கப்படவுள்ள நன்கொடை ரசீதுகளை பெற்று அதன் மூலம் பெறப்படுகிற தொகையை வங்கியில் செலுத்துவதற்கு தலைமை கழகத்தின் அறிவுறுத்தலின்படி பட்டுக்கோட்டை இந்தியன் வங்கி கிளையில் மாவட்ட கழகச் செயலாளர் பெயரில் வங்கி கணக்கு துவங்குவது என ஒருமனதாக முடிவெடுக்கப்படுகிறது. இந்த பணி சிறப்புற அமைவதற்கு கிளை செயலாளர்கள், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலளார்கள் தங்களின் முழு ஒத்துழைப்பை வழங்குவதென முடிவெ டுக்கப்படுகிறது.

இரங்கல் தீர்மானம்:

கழகத்தின் கேடயமாம், முரசொலி நாளிதழின் ஆசிரியராக கடந்த 35 ஆண்டுகளாக பணியாற்றி கழகத்தின் கொள்கை தூணாக விளங்கிய நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்களின் மருமகன் அண்ணன் முரசொலி செல்வம் அவர்களின் மறைவிற்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறது. மற்றும் மாவட்டத்திற்குட்பட்ட மறைந்த கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவருக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

---

**அரசியல் காழ்ப்புணர்ச்சியால் மக்கள் நல திட்டங்களை செயல்படுத்த விடாத**

# சமூக விரோதிகளை எதிர்த்து மாங்குடியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்!

திருவாரூர், அக். 26 -

திருவாரூர் ஒன்றியம் மாங்குடி ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் சீரிய திட்டங்களை செயல்படுத்த விடாமல் தடுத்த சமூக விரோத சக்திகளை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

தமிழ்நாடு இந்திய அரங்கில் முதலாவது மாநிலமாக உருவெடுக்க தமிழ்நாடு அரசின் முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்கள் அனைத்து துறைகளிலும் சீரிய திட்டங்களை தந்து, அதனை செயல்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி பொற்கால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில் திருவாரூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் அத்துனை சாதனை திட்டங்களும் ஒவ்வொரு ஒன்றிய, நகர ,பேரூர் , வார்டு மற்றும் கிளைக்கழக பகுதிகளில் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு சென்று சேர்ந்து பாராட்டினை பெற்று வருகின்றன.

கழக ஆட்சியின் மேல் குறைகண்டுபிடிக்க முடியாத சில சமூக விரோத சக்திகள், அதை பொறுத்துக் கொள்ள முடியாமல் ,நிறைவேற்றப்பட இருக்கும் மக்கள் நல திட்டங்களை எப்படியாவது தடுத்து விட வேண்டும் என்கின்ற நோக்கத்தில் முட்டுக்கட்டைகள் போட்டு வருகின்றன. அதை மக்கள் மன்றத்தின் உதவியுடன் திமுக அரசு தடைகளை முறியடித்து செயல்பாட்டிற்கு கொண்டு வருகிறது.

இந்த நிலையில் திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாங்குடி ஊராட்சியில் மக்களின் தேவை அறிந்து நிறைவேற்றப்பட இருக்கும் தமிழ்நாடு அரசின் துணை சுகாதார நிலையம் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற விடாமல், சில சமூக விரோதிகள் செயல்பட்டு வருகின்றன. இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் எங்களுக்கான திட்டங்களை நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள் என அவர்களை மக்கள் மன்றத்திற்கு அடையாளம் காட்டும் பொருட்டு, மாங்குடியில் பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு பொது மக்கள் சார்பில் பி.கே.ஜி. துரைராஜன் தலைமை வகித்தார். என். ரவி, எம். குணசேகரன், என்.மாரிமுத்து, பி. சுப்பையன், டி.சித்திநாதன், வி. ரவி, ஏ. செல்வம், கே.ராமதாஸ், எம்.சாமிநாதன், ஆர். செல்வராஜ்,கே.காளிதாஸ், ஜே. பால முருகன,எம்.ஜான்சன்,என். மகேஸ்வரன் , பி.லெனின், எஸ். ஐயப்பன் உள்ளிட்ட மக்கள் நல பிரதி நிதிகள் ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சி. கலியமூர்த்தி அனைவருக்கும் நன்றி கூறினார்.

---

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; பா.ஜ.க. ஆளும் குஜராத் மாநிலத்தில், போலி நீதிமன்றமே அய்ந்து ஆண்டுகளாக நடத்தப்பட்டிருக்கிறதே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; போலி நீதிமன்றம் நடத்தப்பட்டு, கடந்த ஓராண்டில் மட்டும், 500 வழக்குகளில் தீர்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.**

**'வாய்மையே வெல்லும்' என்று வாழ்நாள் முழுதும் பின்பற்றி ஒழுகிய அண்ணல் காந்தி அடிகளார் பிறந்த குஜராத்தில்தான் இப்படி!**

**காந்தி அடிகளாரை இதற்கு மேலும் அவமானப்படுத்த முடியுமா ?**

**'குஜராத் ஒளிர்கிறது' - என்று பா.ஜ.க.வினர் பிரச்சாரம் செய்து, அந்த மாநில மக்களை ஏமாற்றி இருக்கிறார்களே !**

**பா.ஜ.க. ஆளும் வேறு சில மாநிலங்களில், போலி அரசு அலுவலகம், போலி டோல்கேட் - போலி வங்கிக் கிளை - என்று போலிகளின் தொடர் நீளுகிறது.**

**பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் " நல்லதுக்குக் காலமில்லே; போலியெல்லாம் போடுதண்ணே கொண்டாட்டம்!".**